**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 926/2023**
**வழக்கு சாட்சி PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குருசாமி | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | மாரியப்பன் | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | தன்னூத்து | வயது | : | 21 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 15th, 2025.

**(எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தன்னூத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 13 வருடங்களுக்கு முன்பு, தன்னூத்து அரசு பள்ளியில் 4ம் வகுப்பு படித்து கொண்டிருந்தேன். மாலை நேரம் எனது வீட்டின் முன்பு நானும், என் தம்பி முருகனும், சாவித்திரி, ரம்யா, ஹரி, அபி மற்றும் காயத்ரி ஆகிய 7 பேர்களும் விளையாடிக் கொண்டிருந்தோம். அப்போது, சின்னராசும், அவரது அப்பாவும் அங்கு நின்றுகொண்டிருந்தார்கள். சின்னராசுவின் அப்பா என்னை அழைத்தார். நாங்கள் 7பேரும் அவர் அருகில் சென்றோம். எதிரிகள் உருண்டை, உருண்டையாக உள்ள பொருளை எங்களுக்கு சாப்பிட கொடுத்தார்கள். அது தித்திப்பாகத் தான் இருந்தது. நாங்கள் சாப்பிட்டோம். சாப்பிட்ட பின்பு மீண்டும் விளையாடிக் கொண்டிருந்த நாங்கள் ஒவ்வொருவராக மயங்கி விழுந்தோம். எங்களுக்கு தந்த

பொருளில் ஈ சாவுவதற்காக வைக்கும் பொருள் கலந்திருந்தது. பின்னர் அனைவரையும் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பின்னர் அங்கிருந்து பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு உள்நோயாளியாக இருந்தபோது, போலீசார் வந்து விசாரிக்க நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு அது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.16 17:56:09 +0530

<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 926/2023</u>
<u>வழக்கு சாட்சி PW-2</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரியப்பன் | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | முனியாண்டி | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | தன்னூத்து | வயது | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of July 15th, 2025.

**(எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் தன்னூத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகன். எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 13 வருடங்களுக்கு முன்பு, நான் வேலைக்கு போய்விட்டு வீட்டிற்கு வந்தேன். அப்போது மாலை சுமார் 06.00 மணியிருக்கும். எனது வீட்டின் முன்பு எனது மகன் அ.சா.1 மற்றும் முருகன், மற்றும் குழந்தைகள் சாவித்திரி, ரம்யா, ஹரி, அபி மற்றும் காயத்ரி ஆகியோர்கள் மயங்கி கிடந்தார்கள். நான் 108 ஆம்புலன்ஸிற்கு போன் செய்து சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று விட்டு, பின்னர் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அவர்களை கொண்டு சென்றோம். மறுநாள் என்னுடைய மகன் குருசாமிக்கு நினைவு வந்தபோது என்னிடம் சம்புத்தன் மற்றும் சின்னராசு அவர்களுக்கு மிட்டாய்

கொடுத்து அவர்கள் தின்றதாக கூறினான். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.07.16 17:56:18 +0530